# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,470 — 1939 ம் ஷு ஆவணிமீ 4 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்.

நி. 2,073 (கொழும்பு).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஷு (ஓகஸ்ற்) ஆவணிமீ 4 ந்தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு எவரேனும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவினபடி இதனுல், அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஷு (ஜூன்) ஆனிமீ 24 ந் தேதியிலன்று கொழும்புக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஏ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசன்றர், கொழும்பு டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காககளைப்பற்றிய இன்னும மேமலதிகமான விபரம் மேல் மாகாண ஏசன்றர் அவர்களிடமிருந்தும் அதன் அளவைப்படம் நில அளவைக்காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ்ச் சொல்லப்படுங் காணித்துண்டுகள் மேல் மாகாணத்தில் கொழும்பு டிஸ்திறிக்கில் ஹேவாகம் கோறளையில் ஊடுகறை பத்துவவில், கொஸ்கம இஹல என்னுங் கிராமத்திலிருக்கின்றன :—

காட்டளவைப் பிரதமபடம் இல. 121.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 18 | கனன்பெல்லமூக்கலான .. | .. 44 | 3 | 11 |
| 28 | கனன்பெல்லமூக்கலான, முந்திகல்கந்த | ..135 | 1 | 36 |
| 35 | கனன்பெல்லமூக்கலான அல்லது முந்திகல்கந்த | .. 4 | 1 | 1 |
| | (துண்டுகளுக்கூடாகக் செல்லும் காலடிப்பாதைகளையும் சிற்றுறுகளையும் நீக்கி.) | 184 | 2 | 8 |

எல்லைகள் பின்வருமாறு : வடக்கு-கனம்பெல்ல என்னுங் கிராமத்தின் எல்லையும், மஹாதொலவும், முந்திகல்தொலவும், எஸ்வத்த என்னுங் கிராமத்தின் எல்லையும் 121 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 29 ம், 30 ம் இலக்கத்துண்டுகள் முந்திகல்கந்தவும் ; கிழக்கு-121 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 31 ம், 32 ம், 33 ம் இலக்கத் துண்டுகள் முந்திகல்கந்தவும், எஸ்வத்த என்னுங் கிராமத்தின் எல்லையும் ; தெற்கு-முந்திகல்தொலவும், பீ. ஜீதஸ் சில்வா உரித்தாடும் கவசிங்கசே தெனியவத்தவும் (தத்துவப்படம் 311,085), தத்துவப்படம் 311,626 ம் டாக்டர் எம். ஜீ. பெறேரு உரித்தாடும் பொஹோறபவவத்தவும் (தத்துவப்படங்கள் 311,625 ம்) 122,358 ம்) 311,627 ம் தத்துவப்படமும், 311,843 ம் தத்துவப்படம் பொஹோறபவமுல்லதொலவும், 121 ம் காட்டளவைப் பிரதமபடத்தில் 34 ம் இலக்கத் துண்டு, கனன்பெல்லமூக்கலானவும், அக்னெஸ் சேமாவதி வீறக்கூன் ஹாமினே உரித்தாடும் முந்திகல்கந்தவும் (தத்துவப்படங்கள் 314,298 ம், 211,084 ம், 311,083, ம் 311,081 ம்) 121 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 27 ம், 26 ம் இலக்கத் துண்டுகள் கனன்பெல்லமூக்கலானவும், முந்திகல்தொலவும், 121 ம் இலக்கக் காட்டளவைக் பிரதமபடத்தில் 25 ம் இலக்கத் துண்டு பல்ஹொறகலலந்த அல்லது தொம்பஹேனவும் 121 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 24 ம் இலக்கத்துண்டு கனன்பெல்லமூக்கலானவும், தத்துவப்படம் 311,840 ம், 121 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 23 ம் துண்டு கனன்பெல்லமூக்கலானவும், மஹாதொலவும், கறவிற்றகே சிங்கப்புவும் மறுபேரும் உரித்தாடும் நற்றவ்மாந்தியலந்தவும் (தத்துவப்படம் 311,541), மிறிஹனகே பவிஸ்தினஹாமியும் மறுபேரும் உரித்தாடும் நற்றவ்மாந்தியலந்தவும் (தத்துவப்படங்கள் 311,543 ம், 311,544 ஜீ. பீ. சேனநாயக உரித்தாடும் நற்றவ்மாந்தியலந்தவும் (தத்துவப்படங்கள் 312,105 ம், 311,543 ம்) ; மேற்கு-121 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 19 ம், 20 ம், 21 ம் இலக்கத் துண்டுகள் கல்லெஹேன அல்லது கல்லெலந்தவும், 121 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 22 ம் துண்டு மஹாதொலஹேனவும், டீ. ஜீ. ஜயத்திலக்க பீ. வீ., உரித்தாடும் மஹாதொலலந்த அல்லது குறுன்னன்சேகேகந்தவும் (தத்துவப்படங்கள் 311,635 ம், 311,636 ம்).

---

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 2,074 (கொழும்பு).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஷு (ஓகஸ்ற்) ஆவணிமீ 4 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு எவரேனும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஷு (ஜூன்) ஆனிமீ 24 ந் தேதியிலன்று கொழும்புக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஏ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசன்றர், கொழும்பு டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மேல் மாகாண எசன்றர் அவர்களிடமிருந்தும் அதன் அளவைப்படம் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ்ச் சொல்லப்படும் காணித்துண்டுகள் மேல் மாகாணத்தில் கொழும்பு டிஸ்திறிக்கில் ஹேவாகம் கோறளையில் மெதபத்துவவில் மாதின்கல என்னும் கிராமத்திலிருக்கின்றன :—

I.—காட்டளவைப் பிரதமபடம் இல. 85.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். எ. று. ப. |
|---|---|---|
| 2 | மிறியகலகந்த அல்லது மபுலனெலந்த அல்லது மிறியகல் கந்த .. .. | ..159 0 15 |

மபுல்தொலவை நீக்கு.

எல்லைகள் பின்வருமாறு : வடக்கு-மிறியகல்ல என்னும் கிராமத்தின் எல்லையும், 20,312 ம் பிரதமபடத்தில் உள்ள துண்டுகள், 16A, 16L, 16M, 16E, 16J, உம் 16G உம் (மிறியகலகந்த அல்லது மிறியகல்கந்த) ; கிழக்கு-வெறகல என்னும் கிராமத்தின் எல்லையும், தத்துவப்படம் 101,842 ம் மபுல்தொலவும், காட்டளவைப் பிரதமபடம் 85 ல், 3 ம் இலக்கத் துண்டும் (மிறியகலகந்த), ஜே. மார்த்லேசுவும் மறுபேரும் உரித்தாடும் மிறியகலகந்தவத்தவும் (தத்துவப்படம் 357,710) ஜே. டொன் தெபானிசுவும் மறுபேரும் உரித்தாடும் மிறியகலலந்த பல்லே தெனியவும் மிறியகலகந்தவத்தவும் (தத்துவப்படங்கள் 241,877 ம் 358,100 ம்) ; தெற்கு-றைகம் கோறளையின் எல்லையும் டீ. சீ. பதும பெறும உரித்தாடும் கந்தபொடலந்தவும் (தததுவப்படம் 183,856) ; மேற்கு-சிற்றாறும், 85 ம் இலக்கக் காட்டளவைப்படத்தில் 1 ம் இலக்கத் துண்டும் (மிறியகல்லை என்னும் கிராமத்தின் எல்லை) மபுலதொலவும்.

II.—காட்டளவைப் பிரதமபடம் இல. 85.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். எ. று. ப. |
|---|---|---|
| 3 | மிறியகலகந்த .. .. | .. 29 0 6 |

4 ம் இலக்கத் துண்டை நீக்கி.

எல்லைகள் : வடக்கு-மபுல்தொல ; கிழக்கு-வாய்க்காலும், A179 ம் பிரதமபடத்தில், 2 ம், 1 ம், 4 ம், 5 ம், 9 ம், 10 ம், 11 ம் இலக்கத் துண்டுகள் (மிறியகல்கந்த) ; தெற்கு-241,879 ம் இலக்கத் தத்துவப் படத்தில் உரித்தாடும் காணியும், றைகம் கோறளையின் எல்லையும், ஜே. மார்த்தேலிசுவும் மறுபேரும் உரித்தாடும் மிறியகலகந்தவத்த ; மேற்கு-85 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 2 ம் இலக்கத் துண்டு (மிறியகலகந்த அல்லது மபுலனெலந்த அல்லது மிறியகல்கந்த).

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 2,075 (கொழும்பு).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண் டென்று 1939 ம் ஹூ (ஓகஸ்ற்) ஆவணியீ 4 ந தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு எவரேனும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொலலிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

1939 ம் ஹூ (ஜூன்) ஆனிமீ 24 ந தேதியிலன்று கொழும்புக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

எ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி எசன்றர், கொழும்புக் டிஸ்திறிக்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மே மாகாண எசன்றர் அவர்களிடமிருந்தும் அதன் அளவைப்படம் நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணி களுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மேல் மாகாணத்தில், கொழும்பு டிஸ்திறிக்கில், ஹேவாகம் கோறளையில், மெதபத்துவவில், மீறியகல்ல என்னுங் கிராமத்திலுள்ளதும் மீறியகலகந்த அல்லது மபுலனேலந்த என்று பொதுவாக அழைக்கப் படும் அல்லது தெரிந்த காணி : இந்தக் காணி 118 எக்கர், 1 றூட், 26 பேர்ச்சஸ் விசாலமுடையதாய், 85 ம் இலக்கக் காட்டளவைப் பிரதம படத்தில் 1 ம் இலக்கத் துண்டாகக் காட்டப்பட்டுப் பின்வரும் எல்லை களுக்குள் அடங்குகின்றது :—

வடக்கு-பீ. இறிகோறிஸ் உரித்தாடும் இம்புல்கஹவத்தவும், 241,864 ம் இலக்கத் தத்துவப்படத்தில் உரித்தாடப்படும் காணியும், 241,863 ம் இலக்கத் தத்துவப்படமும் டீ. சீ. தர்மரத்தன உரித்தாடும் மபுல்லன வத்தவும் (தத்துவப்பட இலக்கம் 241,862) ; கிழக்கு-மபுலனேதொலவும், 85 ம் இலக்கக் காட்டளவைப் பிரதமபடத்தில் 2 ம் இலக்கத்துண்டும் (மாதின்கல என்னுங் கிராமத்தின் எல்லை) சிற்றாறும் ; தெற்கு-431,026 ம் இலக்கத் தத்துவப்படமும், 227,419 ம் இலக்கத் தத்துவப் படத்தில் எம். சேதிறிஸ் பெறேரு உரித்தாடும் மீறியகலாயலந்தவும், எம். பெனிறிஸ் பெறேரு உரித்தாடும் ரோஸ அலுவலந்தவும் (431,025 ம் 191,751 ம் இலக்கத் தத்துவப்படங்கள்) எம். டீ. டானியல் அப்புஹாமி உரித்தாடும் கஹடுறுகஹவத்தவும் (431,027 ம் இலக்கத் தத்துவப்படம்) எம். டீ. டானியல் அப்புஹாமி உரித்தாடும் கொஹொம்பகஹவத்தவும் (191,749 ம், 191,750 ம் இலக்கத் தத்துவப்படங்கள்) கே. [illegible] அப்பு உரித்தாடும் கொறக்கஹவத்தவும் ; (430,693 ம் இலக்கத் தத்துவப்படம்) ; மேற்கு-எம். டீ. பீரிஸ் அப்பு உரித்தாடும் கொறக்க கஹவலந்தவும் (430,692 ம் இலக்கத் தத்துவப்படம்), ரி. [illegible] அப்பு உரித்தாடும் கொறக்கஹவலந்தவும் (430,332 ம் இலக்கத் தத்துவப்படம்) கே. கரோலிசும் மறுபேரும் உரித்தாடும் கொறக்கஹவத்தவும் (144,689 ம், 431,746 ம் இலக்கத் தத்துவப்படங்கள்), ரி. ஜோன அப்பு உரித்தாடும் கலபொடதெனியவும் (144,690 ம் இலக்கத் தத்துவப்படம்) சிற்றாறும், T.P. T. 1136 ம், ரி. ஸைமனும் மறுபேரும் உரித்தாடும் கஹூற்றகஹதெனியவும் (133,319 ம் இலக்கத் தத்துவப் படம்), 20,312 ம் இலக்கப் பிரதமபடத்தில் 7 ம் இலக்கத் துண்டும், 241,875 ம் இலக்கத் தத்துவப்படத்தில் ரி. ஜோனும் மறுபேரும் உரித்தாடும் கஹூற்றகஹவத்தவும், 431,756 ம் இலக்கத் தத்துவப் படமும், பீ. எமிஸ் பெறேரு உரித்தாடும் மீகஹவத்த அல்லது கஹூற்ற கஹவத்தவும் (12,385 ம் இலக்கப் பிரதமபடத்தில் 16,194 ம் இலக்கத் துண்டு) எம். பீற்றர் சின்ஞோவும் மறுபேரும் உரித்தாடும் எற்றி கெஹெல்கஹலந்தவும் (T. P. T. 916) கே. மெனிக்ஹாமியும் மறுபேரும் உரித்தாடும் எற்றிகெஹெல்கஹலந்தவும் (119,650 ம் இலக்கத் தத்துவப் படம்) 12,385 ம் இலக்கப் பிரதமபடத்தில் 16,192 ம் இலக்கத் துண்டும், எம். பீற்றர்சிங்கோவும் இன்னுமொருவரும் உரித்தாடும் எற்றிகெஹெல கஹலந்தவும் (431,438 ம் இலக்கத் தத்துவப்படம்), 241,869 ம் இலக்கத் தத்துவப்படமும், ரீ. நோமிசும் மறுபேரும் உரித்தாடும் மில்லகஹவத்தவும், எம். சி. தர்மரத்ன உரித்தாடும் மில்லகஹ வத்தவும் (241,868 ம் இலக்கத் தத்துவப்படம்) பீ. இறிகோறிசும் மறுபேரும் உரித்தாடும் இம்புல்கஹவத்தவும், 430,695 ம் இலக்கத் தத்துவப்படமும், வீ. மெஞ்சோஹாமி உரித்தாடும் இம்புல்கஹவத்தவும் (430,694 ம், 241,867 ம் இலக்கத் தத்துவப்படங்கள்) வாய்க்காலும்.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 2,076 (களுத்துறை).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஹூ (ஓகஸ்ற்) ஆவணியீ 4 ந தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்ய வேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று சொற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஹூ (ஜூலை) ஆடிமீ 12 ந தேதியிலன்று களுத்துறைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

பீ. ஜே. ஹட்சன்,
களுத்துறை உதவி அரசாட்சி எசண்டர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் களுத்துறை உதவி அரசாட்சி எசண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மேல் மாகாணம், களுத்துறை டிஸ்திறிக், றைகம் கோறளை, உடுகஹ பத்துவைச்சேர்ந்த றத்மல்கொட கிராமத்திலுள்ள கீழ்க்காணுங் காணித் துண்டுகள் : இக்காணித் துண்டுகளெல்லாங் கீழ்க்காணு மெல்லைகட்கு ளிருக்கின்றன :—

முதலாம் பகுதி—பிரதமபடம் நொ. 20,010.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். எ. று. ப. |
|---|---|---|
| 2 | கபறகலகந்த (றோட்டுக்கருகாமையில் சேமிப்பு) | .. 0 0 27 |
| 3 | கபறகலகந்த (சுடுகாடு) .. | .. 1 0 35 |

வடக்கு-தம்பறயிலிருந்து கந்தபானகொடைக்குப்போகும் றோட்டு ; கிழக்கு-மாப்புட்டுக்கல கிராம எல்லை (20,010 ம் பிரதமபடத்தில் 1 ம், 27 ம் காணித்துண்டுகள் ); தெற்கு-மாப்புட்டுகல கிராம எல்லை (20,010 ம் பிரதமபடத்தில் 27 ம் காணித்துண்டு ); மேற்கு-1,758 ம் ஒற்றிப்படத்தில் விபரிக்கப்பட்டிருக்கும் காணியும், 16,639 ம் பிரதமபடத்தில் 2 ம் காணித்துண்டும்.

இரண்டாம் பகுதி—பிரதமபடம் நொ. 20,010.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். எ. று. ப. |
|---|---|---|
| 7 | கபறகலகந்த .. .. | .. 45 1 25 |
| 17 | கபறகலகந்த அல்லது கத்தறங்தெனிவத்த (காலடிப் (பாதைக்குச் சேமிப்பு) .. | .. 0 0 10 |
| 20 | கபறகலகந்த .. .. | .. 64 0 12 |

வடக்கு-மாப்புட்டுகலை கிராம எல்லை (20,010 ம் பிரதமபடத்தில் 27 ம் காணித்துண்டு) ; கிழக்கு-மாப்புட்டுகலை கிராம எல்லை (20,010 ம் பிரதமபடத்தில் 27 ம், 26 ம் காணித்துண்டுகள்) ; தெற்கு-எதுறுகலகந்த

(முடிக்குரிய காணி), [illegible] ரெலிஸ் அப்புஹாமியாரும் மற்றவர்களாலும் உரித்துச்சொல்லப்படும் [illegible], 20,010 ம் பிரதம படத்தில் 19 ம், 18 ம் காணித்துண்டுகள், 218,423 ம் உரிமைப்படம், 20,010 ம் பிரதமபடத்தில் 16 ம் காணித்துண்டு, 197,067 ம் உரிமைப் படத்தால் உரித்துச்சொல்லப்படும் காணி, 153,070 ம் உரிமைப்படம்; மேற்கு-20,010 ம் பிரதமபடத்தில் 15 ம் காணித்துண்டு, 7,642 ம் பிரதமபடத்தில் 3,738 ம் காணித்துண்டு, 141,692 ம் உரிமைப்படம், 20,010 ம் பிரதமபடத்தில் 14 ம், 13 ம், 12 ம், 11 ம், 10 ம், 9 ம், 8 ம் காணித்துண்டுகள், 119,923 ம் உரிமைப்படத்தால் உரித்துச் சொல்லப்படும் காணி, 20,010 ம் பிரதமபடத்தில் 6 ம், 5 ம், 4 ம் காணித் துண்டுகள்.

---

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

இல. 2,077 (களுத்துறை).

இதனோடிணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பகுதிக்கேனும் அதில் எச்சொத்துக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணிமீ 4 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்ய வேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ௵ (ஜூலை) ஆடிமீ 12 ந் தேதியன்று களுத்துறைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

பி. ஜே. ஹட்சன்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசண்டர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் களுத்துறை உதவி அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மேல் மாகாணம், களுத்துறை டிஸ்திரிக்ட், றைகம் கோறளே, உடுகஹப் பத்துவைச்சேர்ந்த மாபுட்டுகல கிராமத்திலுள்ள பின்வரும் காணித் துண்டுகள்: இக்காணித்துண்டுகளெல்லாம் கீழ்க்காணும் எல்லைகட்கு ளிருக்கின்றன:—

பிரதமபடம் இல. 20,010.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | கபறகலகந்த (பெரட்டுக்கந்தகாணையின் செரிப்பு).. | .. 0 1 9 |
| 26 | கபறகலகந்த .. .. | .. 35 0 1 |
| 27 | ஷை .. .. | .. 85 2 32 |

வடக்கு-கம்பஹறயிலிருந்து கந்தபாலகொடைக்குப் போகும் றோட்டு; கிழக்கு-ஹதீனகல, 20,010 ம் பிரதமபடத்தில் 38 ம், 37 ம் காணித் துண்டுகள், ஆர். டெல்லேபுலியாரும் மற்றவர்களாலும் உரித்துச் சொல்லப்படும் கஹாட்டகஹவத்தை, 20,010 ம் பிரதமபடத்தில் 36 ம், 35 ம் காணித்துண்டுகள், 10,003 ம் பிரதமபடத்தில் 6,968 ம் காணித் துண்டு, 119,919 ம் உரிமைப்படத்தால் உரித்துச்சொல்லப்படும் காணி, 20,010 ம் பிரதமபடத்தில் 34 ம், 33 ம், 32 ம் காணித்துண்டுகள், பீ. பபுசிங்கோவாலும் மற்றவர்களாலும் உரித்துச்சொல்லப்படும் கொஸ் ஹேனவத்த, 20,010 ம் பிரதமபடத்தில் 31 ம், 30 ம், 29 ம் காணித் துண்டுகள், பீ. டீ. டயஸாலும் மற்றவர்களாலும் உரித்துச்சொல்லப்படும் கல்கொடவத்த, பீ. டீ. உப்பாலிஸ் பெரேராவாலும் மற்றவர்களாலும் உரித்துச்சொல்லப்படும் கல்கொடேவத்த, 20,010 ம் பிரதமபடத்தில் 28 ம் காணித்துண்டு, பீ. டீ. கொர்னேலிஸ் அப்புஹாமியாலும் மற்ற வர்களாலும் உரித்துச்சொல்லப்படும் கல்கொடேவத்த, வீ. பொடிஅப்பு ஹாமியாலும் மற்றவர்களாலும் உரித்துச்சொல்லப்படும் கல்லிந்தே தும்புறே, வீ. பொடிஅப்புஹாமியாலும் மற்றவர்களாலும் உரித்துச் சொல்லப்படும் கல்லெனகட்டியவத்த, 132,432 ம், 219,745 ம் உரிமைப்படங்கள், 20,010 ம் பிரதமபடத்தில் 25 ம் காணித்துண்டு, 219,700 ம் உரிமைப்படத்தால் உரித்துச்சொல்லும் காணி, 20,010 ம் பிரதமபடத்தில் 23 ம் காணித்துண்டு, பீ. டீ. டயஸாலும் மற்றவர்க ளாலும் உரித்துச்சொல்லப்படும் மனாகும்புற, 20,010 ம் பிரதமபடத்தில் 22 ம், 21 ம் காணித்துண்டுகள், 218,422 ம் உரிமைப்படம்; தெற்கு-எதுறகலகந்த (முடிக்குரியது); மேற்கு-றந்மல்கொட இராமகல்லே (20,010 ம் பிரதமபடத்தில் 20 ம், 7 ம், 4 ம், 3 ம், 2 ம் காணித் துண்டுகள்).

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

தொம்பையில் ஒரு கோற்றேச் ஆஸ்பத்திரி கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 1,030. குறிச்சி—தொம்பே.

| துண்டு. | காணியினது பெயர். | | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 1 | மெடலந்தவத்த | .. | தென்னங்காணி, 40 வருஷஞ்சென்ற 64 தென்னையும், 16 பலாவும், 25 வருஷஞ்சென்ற 1 சாப்பலாவும், 15 வருஷஞ்சென்ற 12 கஜுமரமும், 2 மாவும், 10 வருஷஞ் சென்ற 5 கமுகும், ஓலையால் வேய்ந்த ஒரு மண் மட்டமும், ஓலையால் வேய்ந்த ஒரு அற்றுச்மென்றும், 2 குழிகளுமுள்ளது | எம். பீ. பெலெனிஸ் பெறிரு, எம். பீ. ஹெண்டிறிக் பெறிரு, எம். பீ. சீமன் பெறிரு, எம். பீ. சொயிடா பெறிரு, எல்லோரும் தொம்பே | 1 0 8·6 |
| 2 | ஷை | .. | தென்னங்காணி, 40 வருஷஞ்சென்ற 130 தென்னையும், 15 வருஷஞ்சென்ற 5 கஜுமரமும் 1 பலாவுமுள்ளது | டீ. எம். ஜயசேகர, பிறப்பு இறப்பு பதிவுகாரன், தொம்பே | 1 2 30·6 |
| 3 | ஷை | .. | தென்னங்காணி, 40 வருஷஞ்சென்ற 11 தென்னையும், ஓலையால் வேய்ந்த ஒரு மண் கொட்டிலுமுள்ளது | எஸ். ஏ. செலோஹாமி, தொம்பே.. | 0 1 27 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சிமந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணி மாசம் 26 ந் தேதியிலன்று 9 மணிக்கு தொம்பே அரசாங்க ஆண் பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1939 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணிமீ 1 ந் உ.

ஏ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாத்தளை டிஸ்திறிக்கில் Mt./லெனவ பள்ளிக்கூடத்திற்கு இணறு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 550. குறிச்சி—லெனவ.

| துண்டு. | காணியினது பெயர். | | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 1 | இஹலகெதரவத்த | .. | 4 தென்னைமரங்களையும், மற்றவைகளையும் கொண்ட தோட்டம் | லெனவையின் வெல் விதானையான லெனவ இஹல கெதர பன்ஹாமி | 0 0 7·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ௵ (செப்டம்பர்) புரட்டாதி மாசம் 5 ந் தேதியிலன்று மாலை 2 மணிக்கு இபிஸ்ஸ கன்சபாவ மண்டபத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தை களினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்க ளிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1939 ம் ௵ (ஜூலை) ஆடிமீ 29 ந் உ.

ஆர். எச். டீ. மெண்டேர்ஸ்,
உப அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாத்தளை டிஸ்திரிக்கில் [illegible] என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 563. குறிச்சி—பல்லேகம.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வலவ்வனமூக்கலான .. | காடும் பாழ் நிலமும் .. | (1) ஹேன்வெலேயைச்சேர்ந்த அதிகார முதியான்சேலாகே டிக்கிரி மெனிக்கா, (2) மாத்தளையைச்சேர்ந்த ஜி. ஈ. அலிகிசேகரா | 0 0 36·4 |
| 2 | வலவ்வனஹேன .. | சேனை .. | ஷை .. .. | .. 0 0 14 |
| 3 | ஷை .. | பாழ் நிலம் .. | பன்வெகமையைச்சேர்ந்த [illegible] டிங்கிரிபண்டா | .. 0 0 34·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணைப்படி சஞ்திகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆண்டு (செப்ரெம்பர்) புரட்டாதி மாசம் 8 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி, 1939 ம் ஆண்டு (ஜுலை) ஆடிமீ 29 ந் உ.

ஆர். எச். ஐ. மெண்டேர்ஸ், உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பத்தேகமத்தில் இருக்கும் பள்ளிக்கூடம் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 723. குறிச்சி—பத்தேகம.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | யட்டெஹிகேவத்த போககொறற்றுவ | 40 வயதுள்ள 8 தென்னைகளுள்ள தென்னந் தோட்டம் | பத்தேகமத்திலிருக்கும் லொக்குகலுகே ஜேமிஸ் ஹென்றியும் டோனு கொர்னேலியா அபேவிக்ரம குணரட்ன ஹாமினேயும் லொக்குகலுகே சாளிசும் லொக்குகலுகே சாலொட்டேயும், லொக்குகலுகே டோருவும், வெலிகமத்திலிருக்கும் லீசி அபேகுணவர்தன குணசேகராவும் | 0 0 33·7 |
| 2 | யட்டெஹிகேவத்த உத்துறு டிப்பாக யேகொறட்டுவ | 40 வயதுள்ள 13 தென்னைகளும் 20 வயதுள்ள ஒரு பிலாவும் உள்ள தென்னந் தோட்டம் | பத்தேகமத்திலிருக்கும் லொக்குகலுகே ஜேம்ஸ் ஹென்றி | 0 1 3·2 |
| 3 | யட்டெஹிகேவத்த .. | 20–40 வயதுள்ள 18 தென்னைகளும் 5–20 வயதுள்ள இரண்டு பிலாக்களும் 3 கித்துல் மரங்களும் 10 வயதுள்ள 6 றப்பர் மரங்களும் உள்ள தென்னந்தோட்டம் | பத்தேகமத்திலிருக்கும் டோனு கொர்னேலியா அபேவிக்ரம குணரத்தினஹாமினேயும், லொக்குகலுகே ஜேமிஸ் ஹென்றியும், லொக்குகலுகே சாளிசும், லொக்குகலுகே சாலொட்டேயும் லொக்குகலுகே டோருவும் | 0 0 34·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆண்டு (ஓகஸ்ட்டு) ஆவணி மாதம் 28 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு வெலிகம கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி, 1939 ம் ஆண்டு (ஜுலை) ஆடிமீ 31 ந் உ.

எம். ராஜேன்திரா, சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தறை.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் எட்டியாந்தோட்டைப் பகுதியைச்சேர்ந்த 45 ம், 46 ம் மைல் கட்டைகளும் இடையேயிருக்கும் றெயில்வே பாதையைத் திருத்துவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படுங் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 246. குறிச்சி—மாகம்மன.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பத்தலகனற்றெவற்ற .. | தென்னை முதலியன கொண்ட தோட்டம் .. | பீ. கிறிகோறிஸ் பெறேரு | .. 0 0 9·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆண்டு (ஓகஸ்ற்) ஆவணி மாதம் 30 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு டெஹியோவிற்ற கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி, 1939 ம் ஆண்டு (ஜுலை) ஆடிமீ 31 ந் உ.

ஆர். அளுவிஹாரே, உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இம்புல்கல ஆண் பெண் பாடசாலைக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 242. குறிச்சி—இம்புல்கல.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மகாறம்பெவற்ற அல்லது ஹிற்றினவற்ற | தென்னை, கமுகு, பலா, மா, எலுமிச்சை, தோடை, றப்பர் மரம் கொண்ட தோட்டம் | இம்புல்கலவிலிருக்கும், எஸ். நோறிஸ் அப்புஹாமியும், எச். அப்புஹாமியும் | 0 3 18·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆண்டு (செப்ரெம்பர்) புரட்டாசி மாதம் 1 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி, 1939 ம் ஆண்டு (ஜுலை) ஆடிமீ 27 ந் உ.

ஆர். அளுவிஹாரே, உதவி அரசாட்சி ஏசண்டு.

## நகரசங்க அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.

நீர்கொழும்பு நகரசங்கத் தெரிவு, 1939.

நீர்கொழும்பு நகரசங்கத்திற்கு அங்கத்தவர்களாய் தெரிவுசெய்தற்கு தகுதியுடையவர்களின் டாப்பும் அவ்வங்கத்தவரை தெரிவுசெய்யும் தகுதியுடையவர்களின் டாப்பும் மேற்படி சங்கம் கந்தோர் நேரத்தில் பார்வைக்காய் வைக்கப்பட்டிருக்கிறது. 1939 ம் ஆண்டு புரட்டாதிமீ 9 ந் திகதி பகல் 10 மணிக்கு மேற்சொல்லிய கந்தோரில் மேல் மாகாண அரசாட்சி ஏசன்றர் டாப்பில் ஏதும் பெயரைச் சேர்ப்பதற்கு அல்லது சேர்க்கக்கூடாதென்பதற்கும் உள்ள உரித்துகளை விசாரிப்பதற்கு வந்திருப்பார்.

2. தத்தமிட ஆளுகைச்சட்டத்தில் 195 ம் அதிகாரத்தின் 29 (3) ம் பிரிவைக் கவனிக்கவேண்டியது. எவர் ஒருவருடைய பெயரை ஏனும் டாப்பில் பதிவுசெய்தற்கு மறுப்பு இருந்தால் அப்படிப்பட்டவருடைய விலாசத்திற்கு விசாரணைக்கு ஏழு நாளைக்குமுன் எழுத்தில் நோட்டீஸ் கொடுத்தல் வேண்டும். ஆகையால் மேற்சொல்லிய பிரிவின்படி நோட்டீஸ் கொடுப்பதற்கு அப்பேர்ப்பட்ட நோட்டீஸ் 1939 ம் ஆண்டு ஆவணிமீ 25 ந் திகதியில் அல்லது அதற்குமுன் கீழே கையொப்பமிட்டவருக்கு கிடைத்தல் வேண்டும்.

கொழும்புக் கச்சேரி,
1939 ம் ஞூ ஆடிமீ 27 ந் உ.

டபிள்யு. ஓ. ஸ்டீவன்ஸ்,
மேல்மாகா அரசாட்சி ஏசன்றர்.

---

## விளம்பரங்கள்.

### இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்படுத்திய சட்டம்.

### பெயரிடாப்புகளின் திருத்தம்.

கொழும்பு நகரத்தின் தேர்தற் பகுதிகளின் வாக்காளரின் பெயர்களடங்கிய இடாப்புகள், 1939 ம் ஆண்டுக்காக தற்போது திருத்தப்படுகின்றன. 1931 ம் ஆண்டின் இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர சபையிலேற்படுத்திய சட்ட சம்பந்தமான நிபந்தனைகளையும் விசேஷமாய் இலங்கையிலே பிறவாததனுல் நிலையான இலங்கைவாசிகளெனும் உரிமையில்லாதவர்கள் தங்கள் பெயர்களை வாக்காளரின் பெயர்கள் பதிவுசெய்யும் இடாப்புகளில் பதிவிப்பதற்கு எவ்விதம் தகுதியுடையோராவரெனும் நிபந்தனைகளையும் அவதானிக்கும்படி கேட்கப்படுகின்றார்கள்.

2. இலங்கையிலே பிறவாததனுல் நிலையான இலங்கைவாசியெனும் உரிமையில்லாதவர்கள் கீழ்க்கூறிய வண்ணம் தங்களைப் பதிவுசெய்தல் கூடும் :—

I.—7 ம் அம்சப்படி—நிலையான இலங்கைவாசியாயிருக்கத் தெரிந்துகொண்டமையால்

II.—8 ம் அம்சப்படி—எழுத வாசிக்கத் தெரிந்தமையும் ஆஸ்தியுடைமையும் என்ற விசேஷ தகுதியுடைமையால்

III.—9 ம் அம்சப்படி—நிலையான குடிபதியாயிருப்பதைப்பற்றிய சாட்சிப்பத்திரமுடையதனுல் உண்டாய விசேஷ தகுதியுடைமையால்

8 ம், 9 ம் அம்சங்களின்படி பதிவுசெய்யப்படுவதற்கு உடந்தையுள்ளோர் புதினப்பத்திரிகைகளிலும் 1939 ம் ஆண்டு ஆடிமீ 29 ந் திகதியைக்கொண்ட இலங்கை அரசாட்சியாரின் " கெசற் " பத்திரிகையிலும் வெளிவந்த அறிவித்தலிலடங்கியிருக்கும் விதிகளின்படி எழுத்திலே விண்ணப்பஞ்செய்யவேண்டியவராவர்.

7 ம் அம்சத்தின்படி நிலையான இலங்கை வாசியாயிருக்கத் தெரிந்துகொண்ட காரணம்பற்றி பதிவுக்குத் தகைமையுடையோர் பதிவு இடாப்புத் திருத்தம் சபந்தமாகத் தங்களைத் தரிசிக்கும் கணக்கெடுப்பவர் (Enumerators) களிடம் தங்கள் பெயர்களைக் கொடுக்கவேண்டும்.

அவர்கள்—

(i.) இலங்கையிலே தாங்கள் மொத்தமாய் 5 வருஷம்/அல்லது ஐந்து வருஷத்துக்கு மேல் வசித்ததாகவும்

(ii.) இலங்கையைத்தானே தங்கள் நிலையான வாசஸ்தானமாக்கிக் கொள்ளத் தீர்மானித்துக்கொண்டதாகவும் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரின் திருப்திக்கு அத்தாட்சி காட்டும்படி வேண்டப்படுவார்கள்.

3. பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரை நியாயமானபடி திருப்திசெய்யத் தக்க அத்தாட்சி காட்டினுல் மாத்திரம் பெயர்கள் இடாப்பில் எழுதப்படும். பெயர் எழுதாமல்விடப்பட்டிருக்கிற எவரும் தங்கள் பெயரைப் பதிவுசெய்வதற்காக, இராச்சிய மந்திர ஆலோசனைச் சபை ஏற்படுத்திய சட்டத்தின் 17 ம் அம்சத்துக் கிணங்க விண்ணப்பம்பண்ணலாம்.

சீ. ஈ. ட பிந்து,
கொழும்பு வட, மத்திய தென் பதிவுப் பகுதிகளின் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர்.

பதிவுகாரியஸ்த தலைவர் கந்தோர்,
கொழும்பு, 1939 ம் ஆவணிமீ 1 ந் உ.

---

### 1939 ம் ஆண்டில் வாக்காளர் இடாப்புக்களைத் திருத்தியமைத்தல்.

### கொழும்பு வடபாக, மத்தியபாக, தென்பாகத் தெரிவுப் பகுதிகள்.

இலங்கையிலே தங்கள் வாசஸ்தாபன காரணம்பற்றி 1931 ம் ஆண்டில் இலங்கை இராச்சிய மந்திர சபைப் பிரதிநிதித் தெரிவுகள் சம்பந்தமாக ஆலோசனைச் சபையிற்செய்த கட்டளையின் 7 ம் அம்சத்தின்படி கொழும்பு வடபாக, கொழும்பு மத்தியபாக, கொழும்பு தென்பாகத் தெரிவுப் பகுதிகளுக்குரிய வாக்காளர் இடாப்புகளில் தங்கள் பெயர்களைப் பதிவித்துக் கொள்வதற்கு யோக்கியதையுள்ள யாவரும் அறிந்துகொள்ளும் பொருட்டாக, அவ்வண்ணம் யோக்கியதையுள்ளவர்களும் வேறுவகையாக யோக்கியதை கெடப்பெறுதவர்களுமானவர்களின் பெயர்களை விசாரித்தறிந்து கொள்ளும்படி பல அரசாங்க லேக்கர்கள் (Clerks) எண்ணிக் கணக்கெடுப்பவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்று, இதனுல் விளம்பரம் பண்ணப்படுகின்றது.

மேற்சுட்டிய காரியங்களைப்பற்றிய விவரங்கள் அறிந்துகொள்ளும்படியாக 1939 ம் ஆண்டு (ஆகஸ்ற்) ஆவணிமீ 7 ந் தேதிக்கும் 31 ந் தேதிக்குமிடையில் தங்கள் தங்களுக்கென்று குறித்துவிடப்பட்ட இடப்பரப்புகளில் உள்ள வீடுகளுக்குப் போய்வரும்படி எண்ணிக் கணக்கெடுப்பவர் ஒவ்வொருவருக்கும் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போ மறுபடி திருத்தி அமைக்கப்படும் வாக்காளர் இடாப்புகளைக் கூடியமட்டும் பூரணமானவைகளாக்குவதற்காய் மேற்சொல்லிய எண்ணிக் கணக்கெடுப்பவர்கள் உண்மையும் திட்டமுமான விவரங்கள் அறிந்துகொள்ளத்தக்கதாக அவர்களுக்கு உதவிசெய்து அவர்களோடு கூடிமுயலும்படி இக்காரியத்திற் கருமசம்பந்தமுள்ள யாவரையும் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர் வேண்டிக்கொள்கிறார். பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர் அப்படியாகக் கூடிமுயலும் உதவிக்காய் மிகவும் நன்றியுள்ளவராயிருப்பார்.

மேலே குறிக்கப்பட்ட 7 ம் அம்சத்தின்படி யோக்கியதையுள்ள வாக்காளர் எவரும் 1939 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதிமீ 1 ந் திகதிக்குமுன் எண்ணிக் கணக்கொடுப்பவரைச் சந்திக்காவிடின் அல்லது எண்ணிக் கணக்கெடுப்பவரைக்கொண்டு தமது பெயரைப் பதிவுசெய்விக்காவிடின் அத்திகதிக்குப்பின் அதனைப்பற்றி இக்கந்தோருக்கு உடனே அறிவித்தல் வேண்டும்.

சீ. ஈ. ட பிந்து,
கொழும்பு, வடபாக, மத்தியபாக, தென்பாகத் தெரிவு பகுதிகளின் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர்.

பதிவுகாரியஸ்தர் தலைவர் கந்தோர்,
கொழும்பு, 1939 ம் ஆண்டு (ஆகஸ்ற்) ஆவணிமீ 2 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.